# உடன்பிறப்பே... 64

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த பொ.பத்மநாபன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

## “மலை குலைந்தாலும் நிலை குலையா” பொ.பத்மநாபன்!



ஓவியம் :- ரவி - பேலட்

“அன்புள்ள பத்மநாபன் அவர்களுக்கு, வணக்கம். தங்கள் உடல்நிலை பற்றி, நாள்தோறும் விசாரித்த வண்ணமிருக்கிறேன். ஆனால், நேரில் வந்து காணும் துணிவுதான் இல்லை. தாங்கள் மன ஆறுதல் பெற்றிருப்பீர்கள் என நம்புகிறேன். திடமாக இருக்கவும். என்னைத் திடப்படுத்திக் கொண்டு, இரண்டொரு நாட்களில் வந்து பார்க்கிறேன்.”

“மலை குலைந்தாலும் நிலை குலையா பத்மநாபன்” எனப் போற்றப்பட்ட நெல்லை சட்ட மன்ற உறுப்பினர் பொ.பத்மநாபன் அவர்களுக்கு 1974-ஆம் ஆண்டு, ஜூலை மாதத்தில் மேற்கண்ட கடிதத்தை எழுதினார் கலைஞர்.

சென்னையில் கலைஞரின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு, ‘தோவாளை கழகத் தேர்தல் பொறுப்பாளர்’ என்கிற அங்கீகாரத்துடன் ஊர் திரும்பிக் கொண்டிருந்த பத்மநாபன், விழுப்புரம் விக்கிரவாண்டி அருகே விபத்தில் சிக்கி காயமுற்ற நிலையில், இந்தக் கடிதத்தை எழுதினார் கலைஞர்.

கலைஞர் மீது பத்மநாபன் கொண்டிருந்த பற்றும் சாதாரணமானதல்ல. 1972-ஆம் ஆண்டு கட்சிப் பிளவின்போது, தென் மாவட்டங்களில் செல்வாக்குடன் திகழ்ந்த ஜி.ஆர்.எட்மண்ட் அவர்கள், எம்.ஜி.ஆருடன் பிரிந்து சென்று கழகத்துக்கு கடும் நெருக்கடியை உருவாக்கினார். நெல்லையில், பத்மநாபனையும் தன்னோடு அழைத்துச் செல்ல, பல தூதுகளைவிட்டு தோல்வியுற்ற நிலையில் கடைசியாக அவரே நேரில் சென்று அழைக்கிறார். வந்தவருக்கு தேநீர் வழங்கி, உபசரித்த பத்மநாபன், “நான் இருக்கும்வரை என் தலைவர் கலைஞர்தான், என் உழைப்பு தி.மு.கழகத்துக்குத்தான்” என நேருக்கு நேர் சொல்லி அனுப்பியவர் பத்மநாபன். இந்தப் பிணைப்புதான் **‘உடன் பிறப்பே’** என கழகத்தினர் மீது கலைஞர் உரிமை கொண்டதற்கான பிணைப்பு.

திருநெல்வேலி நகரத்தில் வெள்ளந்தாங்கி பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்தவர் பத்மநாபன். பெற்றோர் பொன்னையா - ஆழ்வார் அம்மாள். 1923-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 22-ஆம் தேதி பிறந்தவர். ஓமியோபதி மருத்துவம் கற்று , மருத்துவப் பணியாற்றிக் கொண்டே கழகப்பணியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். திராவிடக் கொள்கைகள் மீது ஈடுபாடு கொண்டிருந்த பத்மநாபன் அவர்கள், பேரறிஞர் அண்ணா பேச்சில் ஈர்க்கப்பட்டு கழக அரசியலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

### யானை சின்னத்தில் தி.மு.க. உறுப்பினர்

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிடாத காலத்திலேயே, 1955-ஆம் ஆண்டு திருநெல்வேலி நகராட்சிக்கு நடந்த தேர்தலில் யானை சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் பத்மநாபன். அந்த வகையில், அன்றைய ஒன்றுபட்ட நெல்லை மாவட்டத்தில் தி.மு.கழகத்தின் முதல் மக்கள் பிரதிநிதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

1955-ஆம் ஆண்டு, நெல்லை நகரமன்றத்துக்கு சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றது முதல், 1976-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 21 ஆண்டுகள் திருநெல்வேலி நகரமன்றத்தினுடைய உறுப்பினராகச் செயல்பட்டு தனக்கும், கழகத்துக்கும் தனிப்பெரும் செல்வாக்கினை உருவாக்கியவர் பத்மநாபன்.

அறிஞர் அண்ணா அவர்களின் ஆணையேற்று, கழகத்தின் பல போராட்டங்களிலும் தயங்காமல் கலந்து கொண்டவர். 1962-ஆம் ஆண்டு **‘விலைவாசி உயர்வு போராட்டம்’**, 1965-ஆம் ஆண்டு **‘இந்தி எதிர்ப்புப் போராட்டம்’** ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறை சென்றவர். அந்தக் காலகட்டங்களில் பாளையங்கோட்டை சிறைதான் கழகத்தினர் பாடம் படிக்கும் பல்கலைக்கழகமாக இருந்தது. அண்ணா, கலைஞர் என கழக முன்னோடிகள் கைது, கழகத்தின் போராட்ட அறிவிப்புகளின் போதெல்லாம் தடுப்புக் காவலில் பலதடவைகள் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை சிறைக்குச் சென்றிருக்கிறார்.

### கொள்கையில் அர்ப்பணிப்பு

1967-ஆம் ஆண்டு, கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு நடைபெற்ற நகரமன்றத் தேர்தலில், நகரமன்றத் தலைவராகும் வாய்ப்பு பத்மநாபனுக்கு அளிக்கப்படலாம் என பேச்சு எழுந்தது. ஆனால், அண்ணா, அவர்களின் தேர்வோ வேறு ஒருவராக இருந்தது. அதை ஏற்று கட்டுப்பாட்டுடன் கழகப்பணி ஆற்றியவர் பத்மநாபன். அந்தக் கழகப்பற்றும் அர்ப்பணிப்பும்தான், 1971-ஆம் ஆண்டு திருநெல்வேலி சட்டமன்றத்திற்கு கழகத்தின் வேட்பாளராக பத்மநாபனைக் கழகத் தலைமை தேர்வு செய்ததற்கான காரணங்கள். தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்த தலைவர் கலைஞர், “பதவிகளுக்காக யோசிக்காமல், கொள்கைக்காக இந்த இயக்கத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட கொள்கைத் தங்கம்” என பத்மநாபனுக்கு வாக்கு கேட்டு, அவரை வெற்றிபெற வைத்தார்.

### ஈரடுக்கு மேம்பாலம்

திருநெல்வேலி நகரச் செயலாளராக 10 ஆண்டு காலம் செயல்பட்டதுடன், மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும் ஆறு ஆண்டுகள் பொறுப்பு வகித்த பத்மநாபன் தொடர்ந்து மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றினார். கழகப் பொதுக்குழு உறுப்பினராக பதினைந்து ஆண்டுகள் அர்ப்பணிப்புடன் பயணித்தவர்.

நெல்லை நகர கூட்டுறவு வங்கித் தலைவர், நெல்லை கூட்டுறவு பேரங்காடித் தலைவர், திருநெல்வேலி கல்விச் சங்கம் (மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரி) ஆட்சி மன்றத் தலைவர் என பல பொறுப்புகள் வகித்து, நெல்லை மாநகர மக்களுக்குப் பலவகையிலும் தொண்டாற்றியவர்.

திருநெல்வேலி மாநகரில், ஆசியாவிலேயே முதல் ஈரடுக்கு மேம்பாலம் அமைக்க, கலைஞர் திட்டமிட்டபோது, அன்றைய நெல்லை நகராட்சி நிர்வாகத்தினர் மற்றும் நகரமன்றத் தலைவர் மறுப்பு தெரிவித்தனர். கழகத்தில் இருந்து பிரிந்து சென்றவர்கள் நகராட்சியில் ஆதிக்கம் செலுத்திய நிலையில், மக்களின் தேவை, கலைஞரின் எண்ண ஓட்டத்தினை உணர்ந்து உறுதியாக நின்று தீர்மானம் கொண்டு வந்து அதை வெற்றி பெறச் செய்தவர் பத்மநாபன். அந்தக் காலகட்டத்தில் நெல்லை மாநகரப் பகுதிகளில் கழகக் கொடிக் கம்பங்களை எல்லாம் சீரமைத்து, புத்தொளியாக கருப்பு சிவப்புக் கொடியைப் பறக்க விட்டு, தொண்டர்களையும் ஊக்கத்துடன் வைத்திருந்தவர் பத்மநாபன்.

### தலைமைக் கழக முடிவுகள்

1971-ஆம் ஆண்டு, யாரை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றாரோ, அவரையே ஆதரித்து, 1980-ஆம் ஆண்டு தீவிரப் பிரச்சாரம் செய்தவர் பத்மநாபன். காரணம் தலைமைக் கழகத்தின் கூட்டணி முடிவு. இப்படி தலைமைக் கழகத்தின் முடிவினை அச்சுப் பிசகாமல் கடைபிடித்தவர் பொ.பத்மநாபன். 1982-ஆம் ஆண்டு திருச்செந்தூரில் நீதிகேட்டு நெடும்பயணத்தின்போது கலைஞருடன் பயணித்தவர் அவர்.

“கழகம் உண்ணா நிலை அறப்போர் அறிவிக்கிறது என்றால், அன்றைய நாளில், அவர் வீட்டில் யாரும் உணவு உண்ணக்கூடாது. அதுமட்டுமல்ல; சமைக்கவே கூடாது என அன்புக் கட்டளையிடுவார்” என்று நினைவுகளைப் பகிர்ந்து கொள்கின்றனர், அவரைப் பின்பற்றி, கழக உணர்வுடன் இருக்கும் அவரது குடும்பத்தினர்.

> **“மருத்துவத்தைத் தொழிலாகக் கொண்ட பத்மநாபன், கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமேல், நாட்டின் பிணி போக்கும் மருத்துவராகவும் தம்மை ஆக்கிக் கொண்டு, கழகத்துடன் இணைந்து நின்றவர்!”**

### அண்ணா விருது

கழகத்தின் தொண்டருக்குத் தொண்டராக, காட்சிக்கு எளியவராக, தலைவர் கலைஞரின் அன்புக்குப் பாத்திரமான அருமை உடன்பிறப்பாய்த் திகழ்ந்த பொ.பத்மநாபன் அவர்களுக்கு 1988-ஆம் ஆண்டு, தலைமைக் கழகத்தின் முப்பெரும் விழாவில் ‘அண்ணா விருது’ அளித்து சிறப்பு செய்தார் கலைஞர். அந்தப் பெருமைக்குரிய உடன்பிறப்பு எதிர்பாராதவிதமாக 1991-ஆம் ஆண்டு செப்டம்பர் 2-ஆம் தேதி இயற்கை எய்தினார்.

**“மருத்துவத்தைத் தொழிலாகக் கொண்ட பத்மநாபன், கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமேல், நாட்டின் பிணி போக்கும் மருத்துவராகவும் தம்மை ஆக்கிக் கொண்டு, கழகத்துடன் இணைந்து நின்றவர்”** என கலைஞரால் புகழாரம் செய்யப்பட்டவர் பொ.பத்மநாபன். அந்த மகத்தான மனிதரை நெல்லை கழகம் எப்படி மறக்கும்?

**...துடிக்கும்**

## கவனத்துக்குரிய ஆய்வு!

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், வார்சா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பணியாற்றிய பேராசிரியர் அ.ராமசாமி, தமிழ் இலக்கியம், சினிமா, நாடகங்கள் குறித்து தொடர்ச்சியாக எழுதி வரும் கலை, இலக்கிய விமர்சகர். சமீபத்தில் ‘கேரளா’ என்ற பெயர் ‘கேரளம்’ என்று மாற்றப்பட்டதன் பின்னுள்ள திராவிட மரபின் தொடர்ச்சியை நுட்பமாக, தன் ஃபேஸ்புக் பக்கத்தில் இவ்வாறு பதிவு செய்திருக்கிறார்.

“கேரளா என்ற பெயரை, கேரளம் என்று மாற்றியிருக்கிறார்கள். இந்த மாற்றம், மலையாளத்தின் மூலமொழி தமிழ் என்பதை ஏற்றுக்கொண்ட மாற்றம். கேரளா எனச் சொல்லும்போது நெடிலாக ஒலிக்கிறது. அப்படி முடிவது சமஸ்கிருத மரபு. தமிழ் அல்லது திரமிளத்தின் பெயர்ச் சொற்களின் விகுதிகள் - நெடிலாக இருப்பதில்லை. அதற்குப் பதிலாக மெய்யொற்றுடன் முடிவது அதன் ஒரியல்பு.

திருவனந்தபுரம் என ‘அம்’ விகுதி பெற்று முடிவது அதன் தலைநகரம். அதுபோல் அ, இ, எ, ஐ என உயிர்க்குறிலாக முடிவதும் உண்டு. கேரளத்தின் கலை இலக்கிய அடையாளங்களாகத் திகழ்ந்த காவாலம் நாராயண பணிக்கர், வைக்கம் முகம்மது பஷீர், தகழி சிவசங்கரன் பிள்ளை போன்றவர்களின் ஊர்ப்பெயர்கள் எல்லாம் அம், இ என திராவிட மூல மொழி இயல்புப்படி - ஈறு பெற்று முடிவதை வாசித்திருக்கிறோம். அந்த இயல்பின்படி கேரளா இப்போது மூலத்திராவிட வடிவத்திற்கு மாறி, கேரளம் ஆகியிருக்கிறது” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சிந்துவெளி நாகரிகத்துக்கும் கீழடி, சங்ககாலத் தமிழர் நாகரிகத்துக்கும் உள்ள ஒற்றுமைகளும் திராவிடமொழிக்குடும்பம் குறித்த மொழியியல் ஆய்வுகளும் பேசப்படும் சூழலில், பேராசிரியர் அ.ராமசாமியின் இந்தப் பதிவு நம் கவனத்துக்கும் உரையாடலுக்கும் உரியது.

## ஃப்ளாஷ்பேக்






ஆ.பாலசந்தர்

### மறக்க முடியாத ஒன்று!

2005-ஆம் ஆண்டு ஜூன் 3 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் விழா நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது, அவரை நேரில் சந்தித்து, நான் வரைந்த தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தின் படத்தைப் பரிசாக வழங்கினேன். அவரும் சிரித்து கொண்டே பெற்றுக்கொண்டார். அதற்கு அடுத்த ஆண்டு கழகம் சட்டமன்றத் தேர்தலில் வென்று, ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது. இந்தத் தருணம் என் வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாத ஒன்று.

**- ஆ.பாலசந்தர், மாணவர் அணி முன்னாள் துணை அமைப்பாளர், கடலூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### கருப்புக்கொடிப் போராட்டமும் மேல் துண்டும்!

1958-ஆம் ஆண்டு, தி.மு.க.வின் கருப்புக்கொடிப் போராட்டத்தின் போது, பேரறிஞர் அண்ணாவும் கழக முன்னோடிகளும் கைது செய்யப்பட்டு, அடையாறு காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தனர். கழகத் தொண்டர்கள் காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர். போலீசார், அண்ணா அணிந்திருந்த மேல் துண்டை அகற்றியதாக செய்தி பரவியதையடுத்து, நிலைமை கட்டுக்கடங்காமல் சென்றது. கழக முன்னோடிகள் அத்தனை பேர் மீதும் போலீசார் வழக்குப் பதிவு செய்தனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

523

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131